I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.24/2021

**Name** : Mangala Lakshmi
**Father/Husband Name** : Murugan

**Age** : 38

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.03.2025**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**விசாரணை தொடங்கும் நேரம்:** 01.20 p.m.

**குறுக்கு விசாரணை**

நான் தற்போது விருதம்பட்டில் வசித்து வருகிறேன். இந்த விபத்தில் காலமாகிவிட்டவர் பெயர் முருகன். அவர் என் கணவர். சம்பவத்தின் போது என் அப்பா பக்கத்தில் இருந்தார். நான் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் ஒரு ஒயர் கட்டாகி விழுந்திருந்தது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கையில் மின் கம்பத்தில் மாடு கட்டவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மின் கம்பத்தை திடீரென்று தொட்டவுடன் தொங்கி கொண்டிருந்த மின் கம்பி மின் அழுத்ததால் மின்சாரம் தாக்கியதில் கீழே விழுந்ததை பார்த்த என் அப்பா ஆறுமுகம் , வேலு சிஎம்சி மருத்துவமனைக்கு என் கணவரை அழைத்து சென்றபோது வரும் வழியலேயே இறந்துவிட்டதாக சொன்னார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நான் நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் பிறகுதான் நான் பார்த்தேன். தகவல் கிடைத்தவுடன் நான் சம்பவம் நடந்த இடத்திற்கே போய் பார்த்து விட்டேன்.

மின் அலுவலர்கள் ஆய்வு செய்த போது ஒயர் எதுவும் அங்கு தொங்கி கொண்டிருக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சிஎம்சி போனவுடம் இரண்டு பேர் வந்து இந்த ஒயரை மேலே கட்டிவிட்டு சென்றுவிட்டார்கள். அவ்வா.ற ஒயர் தொங்கி கொண்டிருந்தால் பக்கத்தில் இருக்கும் transformer ல் fuse போய்விடும் என்றால் அது பற்றி தெரியாது. மின் ஒயர் கட்டாகி கீழே விழுந்தவுடன் transformer ல் fuse போய் விடும் என்றாலும் எனவே அவ்வாறு ஷாக் அடிப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, என் கணவர் தொடும்போது நெருப்பு கொட்டியது நான் ஏதோ காக்கா தான் உட்காரந்திருக்கிறது என்று நினைத்தேன். பொது மக்கள் யாரும் ஒயர் தொங்கி கொண்டிருக்கிறது என்று புகார் கொடுக்கவில்லை என்றால் ஒயர் மிக நீட்டமாக கீழே கிடக்கவில்லை பக்கத்து கம்பத்தில் சாயந்து கொண்டிருந்தது. அவரின் இறப்பு சந்தேகத்திற்குரியது என்றாலும் தவறாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

என் வீட்டில் உள்ள மின் சாதன பொருட்களை உபயோகிக்கும்போது மின்சாரம் தாக்கியிருக்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. ஊரே சாட்சி சொல்லும். ஒவ்வொரு வாரமும் மின்சார துறையிலிருந்து மின் ஆய்வு செய்யப்படுகிறது எனவே ஒயர் கீழே விழ வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்த முதல்தகவல் அறிக்கையில் மின் சார துறையின் மீதோ மின்சார அலுவலர்கள் மீதோ குறிப்பிட்டு புகார் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

முதல் தகவல் அறிக்கையில் தெரியாத அய்யப்பாட்டிற்குரிய குற்றம் சாட்டப்பட்ட இடத்தில் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவரின் பிறப்பு சான்றை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர் பிறப்பு சான்று இல்லை. அவரின் வயதை குறைத்து கூறுகிறேன் என்றால் சரியல்ல. அப்போது அவர் வயது 38 ஆகும். எதன் அடிப்படையில் அவ்வாறு சொல்கிறேன் என்றால் அவரோடு

பள்ளியில் படித்த பள்ளி மாணவர்களின் வயதை ஒப்பிட்டு அவர் வயதை சொல்கிறேன். வயதை காண்பிக்க எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரேத பரிசோதனை அறிக்கையில் அவர் வயது 40 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அவர் வயது அதைவிட அதிகமாக இருக்கும் என்றால் சரியல்ல. அவர் வருமானத்தை காண்பிக்க எந்த ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் என்ன தொழில் செய்கிறார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் அதிகப்படியாக இழப்பீடு தொகை மற்றும் வட்டி தொகை என்றாலும் சரியல்ல. இந்த விபத்தில் மின் துறையின் அஜாக்கிரதை இல்லை என்றால் சரியல்ல. வேறு எதோ சம்பவத்தில் மின்சார துறை மீது பழி போடுகிறோம் என்றால் சரியல்ல. மின்சார துறையின் கவனக்குறைவு என்று குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. வழக்க தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என் மாமியாரான முனியம்மாள் என்பவரை பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் வயதான காலத்தில் எனக்கு வேண்டாம் நீயும் உன் பிள்ளைகளும் போட்டு கொள்ளுங்கள் என்றால் சொன்னார். விருதம்பட்டில் என் அப்பா அம்மா வாங்கி கொடுத்த வீடு உள்ளது. எனவே இந்த வழக்கில் நீதிமன்ற கட்டணம் தகுதியுடைவர் என்றாலும் வரியவர் அடிப்படையில் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம்:** 01.45 p.m.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.